பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 01 2026 WEDNESDAY 7.15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இஸ்ரேல் உடனான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நான்கு புதிய தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதில் மாநில அரசுகள் சிறப்பாக செயலாற்றி வருவதாக மத்தியஅரசு தெரிவித்துள்ளது.

3. சத்திஷ்கடில் 26 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

4. சீன பாதுகாப்புப் படையினர் தங்கள் நாட்டு எல்லையை ஒட்டிய பகுதிகளில் ராணுவப் பயிற்சியை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது என்று தைவான் கூறியுள்ளது.

5. பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh மற்றும் Manas Dhamne காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

இஸ்ரேல் உடனான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இஸ்ரேல் பிரதமருடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்திய பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து உறுதியுடன் போராடுவது என்றும் இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நான்கு புதிய தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதில் மாநில அரசுகள் சிறப்பாக செயலாற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று கோவாவில் தொழிலாளர் நலத்துறையின் இரண்டு நாள் மண்டல மாநாட்டினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இதுபோன்ற மாநாடுகள் 6 மண்டலங்களில் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>><<<<<<

பழங்குடியினரின் கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய இணையமைச்சர் திரு. துர்கா தாஸ் வலியுறுத்தியுள்ளார்.

திரிபுராவில் உள்ள ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளியில் பழங்குடியினர் மையத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் பல்வேறு சிறப்புகளை கொண்டது என்றும் திரு. துர்கா தாஸ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சத்திஷ்கடில் 26 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

சுக்மா மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் காவல்துறையினர் முன் இவர்கள் சரணடைந்த தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவர்களில் 13 பேருக்கு 65 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

சரண்டைந்த நக்ஸலைட்டுகளின் மறுவாழ்விற்காக தலா 50 ஆயிரம் ரூபாய் சத்திஷ்கட் அரசின் சார்பில் வழங்கப்பட்டது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் போட்டித் தேர்வுகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், துணைப் பேராசிரியர் பதவிக்கான போட்டித் தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாக தெரிவித்தார்.

மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு விரைவில் தேர்வுக்கான புதிய தேதி அறிவிக்கப்படும் என்றும் திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

கடந்த ஆண்டு உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்காக நடத்தப்பட்ட தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாக எழுந்த புகார் அடிப்படையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பீகாரில் அரசு உயரதிகாரிகள் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்களின் குறைகளை கேட்டு, அவற்றை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த நடைமுறை வரும் 19ஆம் தேதிமுதல் செயல்பாட்டிற்கு வருவதாகவும் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கேரளாவில் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்காக, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 58 லட்சத்து 45 ஆயிரம் ரூபாயை ஒதுக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

2023ஆம் ஆண்டு முதல் பத்தனம்திட்டா மாவட்டத்தில் இயற்கை பேரிடரால், வீடுகளை முழுமையாகவும், பகுதியளவும் இழந்த 143 பேருக்கு நிதியுதவி வழங்க இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இனி, மத்திய அரசு கடந்த ஆண்டு படைத்த சாதனைகள் குறித்த தொகுப்பு.

(Opening Tune - 20 Sec.)

இதில் இன்று இடம்பெறுகிறது, பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் ...

(Sound Byte - 180 Sec.)

*(பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, கடந்த ஆண்டு விரிவான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது.*

*பழமைவாய்ந்த சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன,*

*வரிக்கட்டமைப்பு எளிதாக்கப்பட்டது,*

*தொழில் துறையினருக்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்தி தரப்பட்டது,*

*மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி ஆற்றிய சுதந்தின தின உரைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி. கடந்த ஆண்டு 8 புள்ளி இரண்டு சதவீதமாக அதிகரித்தது.*

*தொழிலாளர் நலத்துறை, எரிசக்தி துறை, அந்நிய நேரடி முதலீடு, தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் போன்றவை பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்தது.*

தொழிலாளர் நலனுக்கான 29 சட்டங்கள், 4-ஆக குறைக்கப்பட்டன.

பெண் தொழிலாளர்களுக்கு சம வாய்ப்பு கிடைப்பதும், குறைந்தபட்ச ஊதியமும் உறுதி செய்யப்பட்டது.

சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் பயன்பெறுவோர் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரியிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5 சதவீதம் – 18 சதவீதம் என்ற இரண்டு அடுக்கு கட்டண விகிதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த வரி குறைப்பு நடவடிக்கைகள் காரணமாக, பண்டிகை காலங்களில் பொருட்களின் விற்பனை அதிகரித்தது. மக்களுக்கு சேமிப்பும் கிடைத் தது.

நடுத்தர வர்க்கத்தினர் பயன்பெறும் வகையில் வருமான வரிச் சட்டத்திலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுச் சூழல் ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி வழங்குவதிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

இவை தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியது.

சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

அவர்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் அளிக்கப்பட்டன.

தேவையற்ற ஆவணங்களை கோருவது தவிர்க்கப்பட்டதுடன், சிறு தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்தது.

காப்பீட்டு துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் சிறந்த சீர்திருத்த நடவடிக்கையாக கருதப்பட்டது.

பங்குச் சந்தையிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிர்வாகத்திறன் வலுப்படுத்தப்பட்டது.

கடல்சார் துறையிலும் வளர்ச்சியை உறுதி செய்வதற்கான சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சரக்கு போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கான சட்டங்களும் கொண்டுவரப்பட்டன.

கல்வித் துறையிலும் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அணு எரிசக்தி துறையில் தனியார் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதேபோல். வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வதாரச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டம், தொழிலாளர்களுக்கு 125 நாட்கள் வேலை கிடைப்பதை உறுதி செய்துள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசின் பயணத்திற்கு இதுபோன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் கூடுதல் உத்வேகம் அளித்துள்ளது.)

>>>>>><<<<<<

சீன பாதுகாப்புப் படையினர் தங்கள் நாட்டு எல்லையை ஒட்டிய பகுதிகளில் ராணுவப் பயிற்சியை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது என்று தைவான் கூறியுள்ளது

சீன ராணுவத்தின் 207 விமானங்கள், தங்கள் நாட்டு எல்லைப்பகுதியில் பறந்ததாக தைவான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 1-6, 7-6 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Felix Balshaw-வை வென்றார்.

மற்றொரு ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Manas Dhamne 6-2, 3-6, 6-2 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் Beibit Zhukayev-வை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

>>>>>><<<<<<<

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்ட்டத்தில் இந்த இணை, 21-13, 21-15 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Lee Jhe Huei – Yang Po Hsuan இணையை வென்றது.

>>>>>><<<<<<<

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 394 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 25 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 114 ரன் எடுத்துள்ளது.

Benoni-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 393 ரன் எடுத்தது.

Vaibav Sooryavanshi அதிரடியாக ஆடி 74 பந்துகளில் 127 ரன் குவித்தார்.

>>>>>>END<<<<<<<